# கி. ராஜநாராயணனின் (கி.ரா.) வேட்டி சிறுகதையில் கலாச்சாரப் பண்பாட்டு வரலாற்றுப் பதிவுகள்

# Cultural and Historical References in Vetti Short Story by K. Rajanarayanan (K.R.)

முனைவர் ரெ. சுப்புலட்சுமி / Dr. R. Subbulakshmi[1]

**Abstract**

This article delves into the multifaceted elements of Vetti's short story, examining its structural components, thematic content, and historical context. A noteworthy aspect highlighted is the depiction of ancient men's attire and Dhungana Nayak's unique bathing practices. The article emphasizes the role of traditional handlooms, such as kuzhimal and Mal vettis, which are central to the narrative and significant to the local community's livelihood. It further explores the cultural importance of Neem seeds (Veppamuthu) and tamarind seeds (Puliyangottai) as presented in the story. Additionally, the article discusses the Independence Day Silver Festival, integrating historical references and contemporary news. The study concludes with a summary of Vetti's short story, offering a comprehensive and insightful analysis that enhances understanding of the narrative's various dimensions

Date of submission: 2024-06-06
Date of acceptance: 2024-06-25
Date of Publication: 2024-07-30
Corresponding author's Name: Dr. R. Subbulakshmi
Email: subbulakshmisri1968@gmail.com

**Keywords:** Veppamuthu, Puliyangottai, kuzhimal, Mal vettis, Vetti short story, Dhungana Nayak.

## முன்னுரை

உலக உயிரினங்கள் வாழ்வதற்கு நீர், உணவு, இருப்பிடம் ஆகியவை அடிப்படைத் தேவைகளாகக் கருதப்படுகின்றது. இவ்வுயிரினங்களில் மனிதர்களுக்கு உடுத்த உடையும் அத்தியாவசியமாகின்றது எனக் குறிப்பிட்டாலும் உயிரினங்கள் நிலைத்து வாழ்வதற்கு இவற்றினையும் கடந்து வேறு பல இயற்கைக் காரணிகளும் (சூழலும்) பின்புலமாக இருக்கின்றன. எனவே வாழ்வியல் சூழலில் ஏற்படுகின்ற மாற்றத்தினால் மனிதர்களும் எதிர்பாராத வகையில் துன்பங்களைச் சந்திக்கின்றனர். அத்துன்பச் சூழலின்போது வெளிப்படுகின்ற உண்மைகள் பிற்காலச் சந்ததியினர் எண்ணிப் பார்க்கக்கூடிய வரலாற்றுப் பதிவுகளாக அமைந்துவிடுகின்றன. அவ்வகையில் கி.ரா.வின் 'வேட்டி' சிறுகதையில் அமைந்துள்ள பண்பாடு, கலாச்சாரம், வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய வாழ்வியல் பதிவுகளை ஆராய்ந்து வெளிப்படுத்தும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

## 'வேட்டி' சிறுகதையின் அமைப்பு

கிராமங்களில் அன்றாட மக்களின் வாழ்வில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைப் பேசும்போது சாதாரணமாகப் பேசி விட்டுவிடுவர். ஆனால் இக்கட்டானத் துன்பத்தில் சிக்கிய ஒருவரின்

[1]The author is a teacher in the Tamilnadu Government School, India. subbulakshmisri1968@gmail.com

நிலையைப் பற்றி பிறர் பேச ஆரம்பிக்கும்போது ஆதி முதல் அந்தம் வரை அவர் வாழத் தொடங்கிய காலத்திலிருந்து நடந்த ஒவ்வொரு நிகழ்வினையும் நினைவுகூர்ந்து ஒவ்வொரு கதையாகச் சொல்லித் தற்போதைய நிலைவரை விவரித்துப் பேசிக் கொண்டிருப்பர். அவ்வாறு பேசுகின்ற அளவிற்கு வேட்டி சிறுகதையில் தூங்கா நாயக்கரின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வு பின்வருமாறு.

நல்ல கோடைக்காலம். வேலை கிடைத்திருந்தால் வேலைக்குச் சென்றிருப்பார். வேலை கிடைக்காத மனப்புழுக்கம்வேறு. அத்துடன் கோடைக்கால வெப்பத்தினால் உடம்பில் வேர்வை நசநசத்தது. இச்சூழலில் கம்மாக்கரைப் பக்கம் போய்க் காத்தாட ஒரு மரத்தடியில் உட்காரலாமே என்று நடக்கின்ற போது எதிரில் கீழே கிடந்த புளியம்பழத்தினைக் குனிந்து எடுக்கின்ற போது வேட்டி இரண்டாக ஒருச்சாண் நீளத்துக்குப் பிய்ந்து விடுகிறது. தைக்கமுடியாதபடி பிய்ந்துபோனநிலையில் அவர் மனதில் எண்ணியதனையும், அவர் நினைவெல்லாம் பிய்ந்துபோன வேட்டியைப் பற்றிய சிந்தனையில் இருந்ததனால் எதிரில் படுகின்ற, படாத மனிதர்கள் உடுத்தியிருந்த வேட்டிகள், அவர்களுடைய வீட்டிற்குத் தூங்கா நாயக்கர் சென்றிருந்தபோது பார்த்த வேட்டிகள் என ஒவ்வொன்றாக மனதில் நினைவுகூர்ந்ததனையும், அவருடைய கதையையும் பேசுவதாக அமைந்ததுதான் வேட்டி சிறுகதை எனலாம். இதனையடுத்து வேட்டி சிறுகதையில் விவரிக்கப்பட்ட செய்திகள் ஆய்வுச் செய்திகளாக இடம் பெறுகின்றன.

**வேட்டி**

பண்டைக்காலந்தொட்டு ஆண் மக்களின் ஆடை என்பது வேட்டியாக இருந்ததனை, 'உயர்குடியில் பிறந்த ஆண்மக்கள் ஆடையில் ஒரு வேட்டியும் மேலாடையும் அணிவர். சிலர் சட்டை அணிவதுமுண்டு. பணியாளர்கள் வேட்டியும் சட்டையும் அணிந்தனர். சிலர் அரையில் மட்டும் வேட்டி அணிவதுண்டு' (தமிழக வரலாறும் பண்பாடும், பக்.35) என்ற இக்குறிப்பின்மூலம் அறியலாம். ஆண்களின் அடிப்படைத் தேவையாக இருந்த வேட்டியும் தூய வெண்மை நிறத்தில் இருந்ததனால் புழுதி பறக்கும் மண் தரையாக இருந்த அக்காலச்சூழலில் வேட்டியைப் பராமரிப்பது கடினமாகத் தோன்றினாலும், வேட்டியை உடுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. இந்நிலையில் கிராமத்தில் ஒரு சிலர் ஊருக்காக வேட்டியைக் கட்டிக்கொண்டு அவ்வேட்டி அழுக்குப்படாமலும் நைந்து போகாமலும் பாதுகாப்பதற்காக அவர்கள் பட்ட பாட்டினைக் குறிப்பிடும் வகையில், தூங்கா நாயக்கரின் வேட்டி கிழிந்து பிய்ந்தவுடன் அவர் மனதில் தோன்றிய முதல் மனிதரான நாணப்ப நாயக்கரைப் பற்றி தூங்கா நாயக்கர் மனதில் எண்ணியதாக இடம் பெற்ற செய்தியில், *“தெரியாமலா நாணப்ப நாயக்கர் அப்படிச் செய்யிறார் அவர் ஒண்ணும் பைத்தார மனுசன் இல்லை நல்ல வசதியானவர். உக்காரும்போது – அது எந்த இடமானாலும் சரி–கலியாணவீடோ, விசேசவீடோ, ஊர்ப் பொதுக்கூட்டமோ கம்மாக்கரையோ எங்கானாலும் சரி, வேட்டி தரையில் படாமல் பார்த்துக் கொள்வார். அதனால் அவரை கஞ்சம்பத்தி, ஈயாப்பத்தி என்று யார் எவர் கேலி செய்தாலும் சரிதான்”* “போங்கடா பேப்பய புள்ளைகளா” என்று சொல்லி விட்டு அவர் பழக்கத்தினை மாற்றிக் கொள்ளாமல் இருந்த மனவுறுதியின் இரகசியம் தூங்கா நாயக்கருக்கு இப்பொத்தான் விளங்குகிறது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்செய்தியானது குடித்துக் கூத்தாடி சொத்தை இழந்த பின்பு இப்போ நினைத்துப் பார்க்கிறான். இப்போ நினைத்துப் பார்த்து என்ன பயன்? என்று கிராமத்தில் பெரியவர்கள் சொல்வதனை நினைவுப்படுத்துவதாக உள்ளது எனலாம். அடுத்து மற்றவர்களின் பார்வையைப் பொருட்படுத்தாமல் வேட்டியைப் பராமரித்த நாணப்ப நாயக்கரைப் போல் தூங்கா நாயக்கரும் வேட்டியைப் பராமரித்திருந்தால் குனிகின்ற போது பிய்ந்து கிழிகின்ற அளவுக்கு வேட்டி நைந்து போயிருக்காது என்ற கருத்தினைக் கொண்டு, “*விளங்கி என்ன செய்ய இப்பொ*” என்று கூறப்பட்டிருப்பதனை அறியலாம். நாணப்ப நாயக்கரைப் பற்றி தூங்கா நாயக்கர் நினைத்தது போல தூங்கா நாயக்கரைப் பற்றிக் குறிப்பிடுகின்ற செய்தி பின்வருமாறு,

## 'ஆகஸ்ட் தியாகி' ஆகாமல் ஒரு நூல் இழையில் தப்பிய தூங்கா நாயக்கர்

1942-இல் ஆகஸ்டு மாதத்தில் ஜனங்கள் வெள்ளை ஆட்சிக்கு எதிராகப் பொங்கி எழுந்தார்கள். அந்த எழுச்சியை அடக்க வெள்ளை அரசு ஜனங்கள் மேல் கூட்டு அபராதம் போட்டது. தலைகால் புரியாத பேத்தமான அடக்குமுறை போராட்டத்தில் ஈடுபட்டு தலைமறைவாக இருப்பவர்களுக்குப் புகலிடமோ, சாப்பாடோ கொடுக்கக் கூடாது என்று உத்தரவிட்டிருந்தது. சர்க்காரின் உத்தரவைப் பற்றித் தெரிந்தே நாயக்கர் ஒரு தலைமறைவு அரசியல்வாதிக்கு தன் குடிசையில் அடைக்கலம் கொடுத்தார். காரணம் அவருக்கு அடி நாளிலிருந்தே தேசியப் போராட்டம், சுதந்திரம் முதலியவற்றில் கொஞ்சம் கிறுக்கு உண்டு. தலைமறைவாக இருந்த அரசியல்வாதி இவருடைய வீட்டை விட்டுப் போன பிறகுதான் போலீஸீக்கு இது பற்றித் தகவல் தெரியவந்தது. அதன் பின்பு தூங்கா நாயக்கருக்குக் கிடைத்த அடி, உதையை விளக்குவதற்காக உபயோகித்த உவமைகள். *“பழைய பித்தளைப் பாத்திரக் கடைக்காரன் அருமையான பாத்திரங்களை எல்லாம் தெருவிலே போட்டு அடித்து நைப்பானே அது மாதிரி. சிறு குழந்தை பருவத்தில் சிறு குழந்தைகள் தவளைகளையும், வண்டுகளையும் கல்லால் நைத்து சித்திரவதை செய்வது மாதிரி”* இந்தியா உஷ்ணமான (வெப்பமான) நாடு என்னத்துக்கு 'பூட்ஸ்' என்று மூளையுள்ள வெள்ளைக்காரன் கொடுக்கவில்லை. ஆகவே நாயக்கர் செருப்புக் காலால் உதைப்பட்டார்.

“எவ்வளவு நேரந்தான் ஒரு மனுசனைப் போட்டு கம்மங்கதிரை சமட்டுகிற மாதிரி சமட்டிக்கொண்டிருக்க முடியும்?” இறுதியில் கையும் காலும் போலீஸீக்கு வலித்ததால் பிழைத்துப் போ என்று நாயக்கரை எச்சரித்து விட்டுவிட்டார்கள். எனவே “ஆகஸ்டு தியாகி” ஆகாமல் ஒரு நூல் இழையில் தப்பினார் எனத் தூங்கா நாயக்கர் உயிர் பிழைத்த செய்தி கூறப்பட்டுள்ளது. இச்செய்தியில் தலைகால் புரியாத பேத்தனமான அடக்குமுறை இருந்ததனை ஆராயும் போது,

*“வெள்ளையனே வெளியேறு”* என்ற தீர்மானத்தை 1942-இல் காங்கிரஸ் நிறைவேற்றியது. காந்தியடிகளும் பிற பல தலைவர்களும் கைது செய்யப்பட்டு நாடு முழுவதும் குழப்பங்களும், பூசல்களும் ஏற்பட இது போதுமான தூண்டுதலாக அமைந்தது. அடித்துத் தாக்கவும், தீயிடவும், சொத்துக்களை அழிக்கவும் மக்கள் தலைப்பட்டனர். ஐந்து திங்களுக்கு இவ்வியக்கம் நீடித்தது. பல மக்கள் உயிர் நீத்தனர். 1942 ஆகஸ்ட் இறுதியில் இவ்வியக்கம் இறந்துபட்டது2 (ராமலிங்கம், 1989) என்ற இவ்வரலாற்றுக் குறிப்பினையும், 1942 ஆகஸ்டு மாதத்தில் தூங்கா நாயக்கருக்குக் கிடைத்த அடி, உதை பற்றி பதிவு செய்த குறிப்பினையும் ஒப்பிட்டு உண்மையை அறிய முடிகிறது எனலாம். அடுத்து தூங்கா நாயக்கர் உடுத்தியிருந்த வேட்டியைப் பராமரித்த விதத்தினைக் விளக்குகின்ற போது, அக்காலகிணற்றுக் குளியல் முறை பற்றி கூறிய செய்தி பின்வருமாறு:

### கிணற்றுக் குளியல் முறை

தூங்கா நாயக்கர் கிணற்றில் இறங்கிக் குளித்த முறையினைக் குறிப்பிடும்போது, *‘கிணற்றுக்குள் இறங்கி இரண்டு, மூன்று வட்டம் கிணற்றின் சுவரை ஒட்டி நீச்சல் அடித்துவிட்டு வந்து கிணற்றுப்படிகளில் இடுப்பளவு உயரம் தண்ணீரில் நின்று கொண்டு தேய்த்துக் குளிப்பார். குளிக்கும் போதே பதனமாகத் துவைத்து, பூப்போல உதறி, கமலையின் சிறகுப் பலகையின் மேல் காயப்போட்ட வேட்டியை அண்ணார்ந்து மேலே ஒரு பார்வை பார்த்துக் கொள்வார்* என்பதன் மூலம் வேட்டியைச் சலவைக்குப் போடுகின்றபோது, அழுக்கு வேட்டிகளை வெள்ளாவியில் வைத்து சலவை செய்வர். வேட்டி விரைவில் கிழிந்து விடும் என எண்ணி தூங்கா நாயக்கர் தானே தன்னுடைய வேட்டியைத் துவைத்துக் கொண்டதனை ஊகித்து அறியலாம். அடுத்து கிராமத்திற்கு ஈயம் பூசுபவர்கள், பச்சை குத்துபவர்கள், கழைக் கூத்தாடிகள், பாவைக் கூத்து போடுபவர்கள் எனப் பல பேர் வந்து கொண்டிருப்பர். அவர்கள் கண் பார்வையில் கிணற்றுக்குள் குளிப்பவர் தென்படாதபோது, காயப் போட்ட வேட்டி யாருடையது என

*அறியாமல் எடுத்துக் கொண்டு போய் விடுவர். அதனால் அவருடைய ஒரு பார்வை வேட்டியின் மேல் இருந்துள்ளதனையும் அறிய முடிகின்றது எனலாம்'* (ஓலைச்சுவடி-பக்.5).

மேலும் அக்காலத்தில் கமலை கொண்டு நீர் இறைத்ததனை நினைவுப்படுத்தும் வகையில் கமலையின் சிறகுப் பலகையைப் பற்றிக் குறிப்பிட்ட செய்தி இன்றைய தலைமுறையினருக்கு வரலாற்றுக் குறிப்பாக அமைவதனை அறியலாம். தூங்கா நாயக்கர் குளித்து முடித்த பின்பு இறுதியில் மெல்ல இடுப்புத் துண்டை அவிழ்த்து நீளவசத்தில் கங்குல் பிடித்து தண்ணீரில் வட்டமாகச் சுற்றுவார் வேகமாக துண்டு முறுக்கேறி பாம்பு போல் சுற்றும். மறுகோடியை அப்படியே பிடித்து முதுகில் போட்டு இழுத்து, இழுத்து துண்டின் இழுப்புக்கு வசதியாக முதுகை நெளித்து நெளித்து அழுக்குத் தேய்ப்பார் எனக் குறிப்பிட்டிருந்தாலும் இதற்கான காரணத்தினை ஆராயும்போது,

*'குளிக்கும்போது நம் உடலில் எல்லா பாகங்களிலும் குளிர் பரவுகின்றது. மிக அதிகமான குளிர் அனுப்பவப்படுவது முதுகிலாகும். முதுகெலும்பில் அதிக நேரம் குளிர் ஏற்க வேண்டியது வந்தால் நோய்வாய்ப்பட வாய்ப்புண்டு. இதனால் உண்டாகும் தீங்கினைத் தவிர்க்கவே குளித்தவுடன் முதுகைத்துடைக்க வேண்டும் என்ற விதிமுறையை வகுத்துள்ளனர்'* (ஓலைச்சுவடி-பக்.40) என்ற இச்செய்தியின் மூலம் நெடுநேரம் கிணற்றில் குளித்த பின்பு இறுதியில் துண்டால் முதுகினை இழுத்து இழுத்து தேய்த்ததற்கான காரணத்தினை அறியலாம். அத்துடன் நம் முன்னோர்கள் காரணத்தினைச் சொல்லாமலேயே ஒரு பழக்கத்தினை நடைமுறைப்படுத்தியதனை உணரலாம்.

குளிர்ந்த தண்ணீரில் குளிக்கக் குளிக்கச் சொகம்தான். ஆனாலும் நாம் என்ன சுப்பு செட்டியார் மாதிரி திளைத்துக் குளிக்க முடியுமா? என எண்ணி தூங்கா நாயக்கர் சுப்பு செட்டியாரைப் பற்றி நினைவுகூர்ந்த செய்திகளாகக் குறிப்பிடப்பட்டவை பின்வருமாறு. சுப்பு செட்டியார் ஆனந்தமாய்க் குடைந்து குடைந்து நீராடி விட்டு தண்ணி போட்டவன் மாதிரி கண்களைச் சிவப்பாக வைத்துக் கொண்டு கையில் 'துவை வேட்டியுடன் கிணற்றிலிருந்து தண்ணீரைப் பிரிய மனசில்லாமல் வெளியே வருவார் என்ற இச்செய்தியானது பள்ளி விடுமுறை நாட்களில் சிறுவர்கள் கிணற்றின் மேலிருந்து சொர்க்குப் பாய்ந்து குளித்து விளையாடிய பின்பு வெளியேறுகின்ற சிறுவர்களின் கண்களை நினைவூட்டுவதாக உள்ளது.

பண்டை காலத்திலிருந்து சிறுவர்கள் தண்ணீரில் குதித்து விளையாடி மகிழ்ந்ததற்கு, *'சிறுவர் மடுவில் துடும் எனக் குதித்து மூழ்கி மண்ணை எடுத்து வந்து கரை மேல் நின்ற சிறுமியர்க்குக் காட்டி வியப்பூட்டுவார்கள்' (தமிழக வரலாறும் பண்பாடும், பக்.37)* என்ற செய்தி சான்றாகின்றது எனலாம். கிராமங்களில் சிறுவர்கள் குளங்களில் குளிக்கின்றபோது இவ்வாறு விளையாடுவது வழக்கம்.

மேலும் நீர் நிலைகளில் குளித்து விட்டு வரும்போது உடுத்தியிருந்த ஆடைகளை துவைத்துக் கொண்டு வருவது இயல்பு எனினும் இக்கதையில் துவை வேட்டி என்பதனை விளக்கும் வகையில் அமைந்த செய்தி பின்வருமாறு.

### துவை வேட்டி

அந்த ஊரிலேயே சுப்புசெட்டியார் ஒருத்தர்தான் 'துவை வேட்டி' போடுகிறவர். துவை வேட்டி போடுவதற்கு மூன்று 'செட்' ஆடைகள் வேண்டும். ஒரு செட் என்பது அவருக்கு, அரைஞாண் கயிற்றுக்குப் பதிலாக நாடா இணைத்துத் தைக்கப்பட்ட ஒரு கோவணம், கரையில்லாத ஒரு நாலரை முழம் மல் பீஸ் வேட்டி, ஒரு வடசேரி ஈரிழை சிட்டித்துண்டு இவை கொண்டது. முதல் நாள் துவைத்துக் கொண்டு வந்த 'செட்'டை உலைக்காமல் அப்படியே ஈரத்தோடு கொடியில் முறுக்கி வைத்துவிட வேண்டும். இரண்டாவது நாள் துவைத்துக் கொண்டு வரும் 'செட்'டை முதல் நாள் செய்தது போலவே அதையும் ஈரத்தோடு கொடியில் முறுக்கி வைத்து விட்டு, முதல் நாள் முறுக்கி வைத்திருந்த துணிகளை நிழலில் விரித்து ஆறப்போட வேண்டும்.

மூன்றாம் நாள் துவைத்துக் கொண்டுவரும் துணிகளையும் முதல் நாள் செய்தது போலவே முறுக்கி வைத்துவிட்டு இரண்டாம் நாள் முறுக்கி வைத்திருந்தவைகளை நிழலில் விரித்து ஆறப்போட வேண்டும். முதல் நாள் துவைத்த துணிகள் இப்போது உலர்ந்து ஆறி இருக்கும். அதை எடுத்து உடுத்திக் கொள்ளலாம். இந்த மாதிரி சங்கிலித் தொடராக தினமும் மாறி மாறிச் செய்து கொண்டே வர வேண்டும். முக்கியமான அம்சம் இந்தத் துணிகள் வெயிலிலேயே படக்கூடாது என்பதுதான். இதை அணிந்து கொள்கிறவனும் நிழலில் உட்கார்ந்து சம்பாதிக்கிறவனாக இருக்க வேண்டும் எனவும்,

★*மல்வேட்டியைத் தவிர வேறு வேட்டியைத் தொட மாட்டார் எனக்குறிப்பிட்டதன் மூலம் துவை வேட்டி கலாச்சாரத்தினை அறியமுடிகிறது.*

### மஞ்சனத்தி மரக்கட்டையில் பாதுகை

பொதுவாக கிராம மக்கள் விதைத்த பயிர்களுனூடேயும், ஊருக்குள்ளும் செருப்பில்லாமல்தான் நடமாடுவர். விதைக்காத காடுகளில் முட்புதர்களை அகற்றச் செல்கின்றபோது மட்டும்தான் செருப்பு அணிகின்ற வழக்கம் இருந்தது. அதேபோல சுப்பு செட்டியாரும் காலில் செருப்புப் போட மாட்டார் எனக் குறிப்பிட்டு, மழைக்காலத்தில் மட்டும் சகதி காலில் ஒட்டாமல் இருக்க மஞ்சனத்தி மரக்கட்டையில் செய்யப்பட்ட பாதுகை அணிந்து கொண்டு நடப்பார் எனக் கூறப்பட்டுள்ளதனை அறியலாம். இன்றைய நிலையில் வெறுங்காலில் நடப்பவர்களைக் கண்டு ஏளனமாகப் பார்ப்பினும்,

‘*பாதத்துக்கடியில் ஊசிகள் குத்திச் செய்யும் அக்யுப்பங்சர் என்னும் சீன சிகிட்சையின் மறுஉருவமே செருப்பில்லாமல் வெறும் காலில் நடப்பதில் இயற்கை நமக்களிக்கின்றது.*’ *(ஓலைச்சுவடி, பக்.30)* என்பதனை மனதிற் கொண்டு நம் முன்னோர்கள் பாத யாத்திரை மரபினைப் பின்பற்றச் செய்ததனை நினைவு கூர வேண்டியது அவசியமாகிறது. இன்றும் கோயில்களில் காவல்தெய்வங்களுக்கு முன் ஆணிகள் பொருத்தப்பட்ட மரக்கட்டை பாதுகை வைத்திருப்பது அக்யுப்பங்சர் மருத்துவ முறையை நினைவுபடுத்துவதாக உள்ளது எனலாம். மேலும் மஞ்சனத்தி மரக்கட்டையில் பாதுகை செய்து அணிந்த செய்தி வரலாற்றுக் குறிப்பாக அமைகின்றது. அடுத்து சுப்புசெட்டியாரின் சுத்தத்தைப் பற்றி குறிப்பிடுகின்ற செய்தி இடம் பெறுகின்றது.

### சுத்தம்

சுப்பு செட்டியாருடைய வீட்டு வாசற்படியில் பளபளவென்று தேய்த்து மின்னும் ஒரு கொப்பறை நிறையத் தண்ணீரும் ஒரு செம்பும் எப்பவும் இருக்கும். வீட்டுக்குள் யார் வந்தாலும் பாதங்களைக் கழுவிக் கொண்டுதான் உள்ளே வர வேண்டும். இது செட்டியாரின் கராலான உத்தரவு எனக் குறிப்பிட்டிருந்ததற்கான காரணத்தினை, ‘*சுத்தமான தண்ணீரால் காலும் முகமும் கழுவும்போது, ஒருவர் தன் உடலிலுள்ள அழுக்குகளை அகற்றி, அவற்றை வீட்டிற்குள் கொண்டு செல்லாமல் துரத்துகின்றார்*’ *(ஓலைச்சுவடி, பக்.129)* என்ற இச்செய்திக் குறிப்பின்மூலம் அறியலாம்.

மேலும் உடம்பிலுள்ள ரோமத்தினைக் களைவதற்கும் நாள், கிழமைப் பார்த்ததனை, ‘*மதியும் புதனும் மயிர்*’ களை என்ற முதுமொழிக்கு ஏற்ப திங்கள் அல்லது புதன் கிழமையில் குடிமகனைக் கூப்பிட்டனுப்பி தலை, மார்பு முதலிய உடம்பில் ரோமம் முளைத்துள்ள சகல பகுதிகளிலும் மழுங்கச் சிரைத்துத் தள்ளிவிடுவார் அதுமட்டுமல்லாமல் வேட்டியிலிருந்தோ, துண்டிலிருந்தோ அவலெச்சணம் போல ஒரு நூல் கூட மருந்துக்குத் தொங்கக் கூடாது. வேட்டி துண்டுகளின் விளிம்புகளை ஜோராக மடித்துத் தைக்கச் சொல்லி விடுவார். இவ்வாறு சுப்புசெட்டியாரைப் பற்றி விவரித்த செய்திகளின் மூலம் சுப்புசெட்டியார் வாழ்வில் பின்பற்றிய கலாச்சாரப் பண்பாட்டினை அறிய முடிகின்றது எனலாம்.

### தூங்கா நாயக்கரின் மனதில் நிழலாடிய வேட்டிகளின் வகைகள்

நல்லா நாயக்கர் வகை வகையாக வேட்டி வைத்திருந்ததனைப் பற்றி, தூங்கா நாயக்கர் நினைவு கூர்ந்ததாகக் குறிப்பிடும்போது, நாலு முழ வேட்டி, பட்டுக்கரை வேட்டி, பட்டு

வேட்டி, எட்டு முழ வேட்டி, மயில்க்கண் வேட்டி, ஜரிகை வேட்டி, கரைகளில் தான் எத்தனை வகை, வாயில் வேட்டிகள் என பல வகையான வேட்டிகளைக் குறிப்பிட்டு, நல்லா நாயக்கருடைய அய்யா பெரிய முதலாளி இருந்தாரே அவரு 'குழாய்மல்' தான் உடுத்துவார் எனக்கூறி குழாய்மல் என்பதற்கு விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது.

### குழாய்மல்

'குழாய்மல்'ங்கிறது லங்காஷியர் மில்லில் – இங்கிலாண்டில் - நெசவானது ரூல்த்தடி கனமுள்ள நீளமான குழாய்களுக்கு உள்ளே, சுருட்டி அடைத்து வருவதனால் அதுக்குக் 'குழாய்மல்' என்று பேர் என்ற இவ்விளக்கத்தினைக் கொண்டு 'இங்கிலாந்து நாட்டுப் பொறிசெய்ப் பொருட்கள் இந்திய அங்காடியில் வந்து குவிந்ததன் விளைவாக உள்நாட்டுத் தொழில்கள் முடமாக்கப்பட்டன7 (ப-158 இ.வ.) என்ற செய்தியினோடு ஒப்பு நோக்கி இங்கிலாந்திலிருந்து வேட்டி இறக்குமதியான வரலாற்றுப் பதிவினை அறிய முடிகினறது.

### மல்வேட்டி மற்றும் வாயில் வேட்டி

தூங்கா நாயக்கர் சுப்பு செட்டியார் உடுத்துகின்ற மல்வேட்டியினைக் கண்டு 'அவருக்கு என்று அந்த மல்வேட்டிகள் எங்கிருந்துதான் கிடைக்குமோ? அவ்வளவு நைஸாகவும், அடர்த்தியாகவும், நேர்த்தியாகவும் இருக்கும் எனவும், நல்லா நாயக்கர் வைத்திருக்கும் வாயில் வேட்டிகள் ரொம்ப உயர்ந்த தரமானவை, குடிமகன் சொன்ன மாதிரி நாக்கிலே பட்டால் நனைந்து போயிடும்' எனவும், மைனர் நாயக்கர் உடுத்திய வேட்டியினை நினைவுகூரும்போது, அசல் முட்டைத்தோடு மாதிரி கோழி முட்டையின் ஓட்டுக்கும், கருவுக்கும் மத்தியில் இருக்குமே முட்டைத்தோடு, அது மாதிரி, என்ன நெசவு என்ன நெசவு எப்படித்தான் நெசவு பண்ணினானோ எனவும் வியந்து மனதிற் எண்ணிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. இச்செய்திகளை, *'சோழர்களது பிரதான ஆட்சிக் கேத்திரம் உறையூராகும். இது பருத்தி வாணிகத்துக்குப் பெரிதும் புகழ் பெற்றது' (பண்டைக்கால இந்தியா, பக்.279)*

தென்னிந்திய நகரங்களில் வண்ணச்சாயம் தோய்க்கும் தொழில் சிறப்புற்று விளங்கிற்று. செங்கற்களால் கட்டப்பட்ட சாயம் தோய்க்கும் ஒரு பெரிய தொட்டி தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி நகரைச் சேர்ந்த உறையூரில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த நகரங்களில் கை நெசவுத் தொழில் பெரிதும் வளர்ச்சியடைந்திருந்தது *(பண்டைக்கால இந்தியா, பக்.291)*. மதுரையில் நெய்யப்பட்ட பருத்தி ஆடையும், கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தில் குறிக்கப்பெறும் உறையூர்ப்பருத்தி நல்ல சிறப்பிடம் பெற்றிருந்தது. பருத்தி உற்பத்தியிலும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தது (தமிழக வரலாறும் பண்பாடும் பக்.29) என்ற செய்திகளோடு ஒப்பிட்டு ஆராயும்போது அக்காலத்தில் கை நெசவுத் தொழில் உன்னத நிலையில் இருந்ததனை எடுத்துக்காட்டுகின்ற வரலாற்றுச் சான்றுகளாக கருதமுடிகிறது.

வேட்டி பிய்ந்து போனதால் தர்ம சங்கடத்தில் இருந்த தூங்கா நாயக்கர் யாருக்கு வேட்டிகள் எத்தனை இருந்து நமக்கென்ன, நம்ம வேட்டி போச்சு, இதுதான் நெசம் என எண்ணிக் கொண்டு முந்தைய தலைமுறையினர் ஆடையைப் பற்றிக் கவலையின்றி இருந்ததனை நினைவு கூர்ந்தபோது, முந்திய தலைமுறை ஆட்கள் மாதிரி இருந்தால் வேட்டியே வேண்டியதில்லை. ஒரு அரணாக்கயிறும் ஒரு பழைய துணி கோவணம் மட்டுமே போதும். வெயிலுக்கு ஒரு கந்தல் துணியை தலையில் லேஞ்சியாக மட்டும் கட்டி முதுகெலும்புத் தண்டில் வெயிலின் சுள்ளாப்புத் தெரியாமல் இருக்க அந்தத் துணியில் ஒரு முழம் சுங்கு விட்டுக் கொண்டால் போதும். எனச் சுட்டிக்காட்டிய செய்தியும் மகாத்மா காந்தி மதுரைக்கு வந்த போது தன் வாழ்வில் உடை அணிவதில் எடுத்துக் கொண்ட உறுதிமொழியினையும் நினைவுகூர்ந்து உண்மையை அறிய முடிகின்றது. அடுத்து எட்டு வயசு வரை ஆண் குழந்தைகள் பிறந்த மேனியாகவே அலைவார்கள். அரையில் அரணாக் கயிறு மட்டுமே இருக்கணும். அது இல்லையென்றால்தான் பார்த்தவர்கள்

சிரிப்பார்கள் என்பதன் மூலம் அரணாக் கயிறுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தியதாகக் கருத முடிகிறது.
அத்துடன் கதை எழுதுகின்ற காலத்தில் சாய வேட்டி, கைலி அறிமுகமான செய்தியும் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### தூங்கா நாயக்கரின் குடும்பச் சூழலை விளக்குகின்றபோது இடம்பெற்ற கிராம வாழ்வியல் செய்திகள்

பல்வேறு மருத்துவக் குணம் வாய்ந்த வேப்பமுத்தினைக் கொண்டு வேப்ப எண்ணெய் தயாரிப்பது, வேப்பமுத்தினை இடித்து தோட்டம் துறவுகளில் போடுவது. வேப்ப பிண்ணாக்கினை உரமாகப் பயன்படுத்துவது என வேப்பமுத்துவின் பயன்பாடு மிக அதிகமாக இருந்தது. எனவே கோடைக் காலத்தில் விளையாட்டுப் போல் சிறியவர் முதல் பெரியவர் வரை வேப்பமுத்துவினைப் பொறுக்கிச் சேர்த்தனை அளந்து வாங்கிச் செல்பவர்கள் அதிகமாக இருந்தனர். இந்நிலையை,

*ஊரைச் சுற்றிலும் வேப்பமரங்கள். கோடைக்காலத்தில் பறவைகள் வேப்பமரத்தில் பழங்களைத் தின்று கொட்டைகள் போடும் ஜனங்கள் ஓடி ஓடிப் பொறுக்குவார்க்ள. கூலிப்பருத்திக்கும் சென்று அதைச் சேர்த்து வைத்து தங்களின் ஆடைகளின் சொல்ப்ப (குறைந்தபட்சம்) தேவையைப் பூர்த்தி செய்து கொள்கின்றவர்களில் ஒருவராகத் தூங்கா நாயக்கரின் மனைவியையும் குறிப்பிட்டு அவருடையக் குடும்பச்சூழலைச் சுட்டிக்காட்டியதனை அறியலாம்.* வேப்ப முத்தினை இடித்துத் தோட்டங்களில் போடுவர், அத்துடன் மருத்துவக் குணம் வாய்ந்த வேப்பமுத்துவின் பயன்பாடு மிக அதிகமாக இருந்ததனை குறிப்பிடுகின்ற வரலாற்றுச் செய்தியாகக் கருதலாம்.

### புளியங்கொட்டை

கோடைக்காலத்தில் காற்றில் உதிர்ந்த புளியம்பழங்களைப் பொறுக்கி எடுத்து வந்து வீடுகளில் காய வைத்து ஓடுகளை நீக்கிய பின்பு உள்ளிருக்கும் கொட்டைகளை எடுப்பர். பின்பு, அந்தக் கொட்டைகளை நொறுக்குத் தீனியாகக் குழந்தைகளுக்கு செய்து கொடுத்ததனைக் கூறும்போது,

*அந்தக் கொட்டைகளை வரையோட்டில் போட்டு வறுத்து, அதை உரலில் போட்டு இடித்து தோலை நீக்கிவிட்டு கொட்டையின் பருப்பை மட்டிலும் உப்புப் போட்ட தண்ணீரில் ஊற வைத்து சாப்பிடக் கூடிய வழக்கம்* இருந்ததனைக் கோடிட்டுக் காட்டிய செய்தியின் மூலம் புளியமுத்துவினைப் பற்றிய வேறு பல செய்திகளும் நினைவுக்கு வருகின்றன. அவை பின்வருமாறு,

*‘ஆண் குழந்தைகள் புளியங்கொட்டைகளைப் பொறுக்கி எடுத்து வந்து செதுக்கு முத்து விளையாட்டு விளையாடுவர்.*

*புளியமுத்தை கால் பாதத்தின் அடியில் வைத்துக் கொண்டு சிமிண்டு தரையில் உரசிக் கொண்டே நகரும் போது தேய்த்தப் பக்கம் வெள்ளையாகி விடும். அம்முத்துக்களைக் கொண்டு ஆண்களும் பெண்களும் தாயம் விளையாடுவர். ஒத்தையா, இரட்டையா விளையாடுவர்.*

*வயதுக்கு வந்த சிறுமியை வீட்டின் ஒரு மூலையில் உலக்கையை எல்லையாக வைத்து உட்கார வைத்திருப்பர். அப்போது அவ்வயதினை ஒத்த சிறுமியர் பார்க்க வருகின்றபோது, புளியமுத்துக்களைக் கொண்டு பல்லாங்குழி விளையாட்டு விளையாட அனுமதிப்பதுண்டு. அதுவும் அச்சிறுமியைத் தொடாமல் விளையாட வேண்டும் என்ற கண்டிப்பும் உண்டு.’*
-சிறுக்குளம் விருதுநகர் மாவட்டம் மக்கள்.

### பல்லாங்குழி விளையாட்டுத் தத்துவம்

வயதுக்கு வந்த பெண் குழந்தைகள் குடும்ப அடுத்து வாழ்வில் அடி எடுத்து வைப்பதற்குரியவர்கள் ஆகின்றனர். எனவே வாழ்வில் ஏற்படக்கூடிய இலாப, நட்டக் கணக்குகளை அறிந்து கொண்டு குடும்ப வாழ்வினை, செம்மைப்படுத்துகின்ற மனப்பக்குவத்தினை பெறுவதற்காக நம் முன்னோர்கள் புளியமுத்தினைக் கொண்டு விளையாடுகின்ற பல்லாங்குழி விளையாட்டினை தகுந்த நேரத்தில் கற்றுக் கொடுத்து நெறிபடுத்தியுள்ளனர். பெண்கள்

விளையாடுகின்ற விளையாட்டில் கூட வாழ்க்கைத் தத்துவத்தினை உணர்த்திய திறனை அறியலாம். *'பள்ளியில் ஆசிரியர் சுண்ணாம்புக் கட்டியில் 'அ' வடிவ எழுத்தினை எழுதிய பின்பு மாணவர்கள் அதன் மேல் ஒவ்வொரு புளியமுத்தாக வைத்து அவ்வடிவத்தினைப் பூர்த்தி செய்வர்'* -விருதுநகர் மாவட்டம் மக்கள். இவ்வாறு குழந்தைகள் விளையாடுவதற்கும், எழுத்துக்களைக் கற்றுக் கொள்வதற்கும், சாப்பிடுவதற்கும் பயன்படக் கூடிய ஒன்றாகப் புளியமுத்து இருந்தது. இச்செய்திகளைக் கொண்டு புளிய மரங்களும், வேப்ப மரங்களும் மக்கள் வாழ்வில் இரண்டறக் கலந்திருந்ததனை அறியலாம்.

### சுதந்திர தின வெள்ளி விழா

சுதந்திர தின வெள்ளி விழாவினைக் கொண்டாடப் பணம் வசூலில் ஈடுபட்ட ஊர்ப் பெரியவர்கள் 1942, ஆகஸ்டு மாதத்தில் அரசியல்வாதிக்கு அடைக்கலம் கொடுத்தக் குற்றத்திற்காக 'ஆகஸ்ட் தியாகி' ஆகின்ற அளவிற்கு செருப்புக் காலால் அடி, உதைப்பட்டு உயிர் பிழைத்த தூங்கா நாயக்கரை கௌரவப்படுத்த எண்ணி நாயக்கரை நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர். அவ்வாறு சாலையில் நடந்து வருகின்ற போது நினைவு கூர்ந்த செய்திகளாகக் குறிப்பிட்டவை. பின்வருமாறு.

*'25 வருசங்களுக்கு முன்னால் ………… (1972 – 25 = 1947) இந்தக் காசி – கன்னியாகுமரி பெருவழிச்சாலை, மங்கம்மா சாலையாக இருந்து அது பிறகு மதுரை ரோடு ஆகியது.'* என்று கூறப்பட்ட செய்தியினை, திருமலை நாயக்கர் காலத்தில் நெடுஞ்சாலைகளை அமைத்தார் என்ற செய்தியும், அடுத்தடுத்த தலைமுறையாக ஆட்சிக்கு வந்த முத்து வீரப்பர் இறந்ததனால் அவருடைய மூன்று மாத ஆண் குழந்தைக்கு (விஜயரங்க சொக்கநாத நாயக்கர்) பட்டம் கட்டி அதன் சார்பாக பாட்டி ராணி மங்கம்மாள் ஆட்சிக்கு வந்தபோது நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கினார். சாலைகளையும், சோலைகளையும் அமைத்தார் (தமிழக வரலாறும் பண்பாடும், பக்.102) என்ற இவ்வரலாற்றுச் செய்தியோடு ஒப்பு நோக்கி ராணி மங்கம்மாள் காலத்தில் காசி – கன்னியாகுமரி பெருவழிச்சாலை உருவாக்கியதன் காரணமாக மங்கம்மாள் சாலை என அழைக்கப்பட்டுள்ளது எனலாம்.

அடுத்து பண்டைக்காலத்தில் வணிகர்கள் கூட்டங் கூட்டமாகக்கூடித் தம் பண்டங்களை வண்டிகளின் மேலும், கழுதைகளின் மேலும் ஊர்களுக்கு விற்பனைக்கு எடுத்துச் செல்வார்கள். இக்குழுக்களுக்கு வாணிகச் சாத்துக்கள் என்று பெயர் (தமிழக வரலாறும் பண்பாடும், பக்.16) என்ற செய்தியினைப்போல் *'25 வருசங்களுக்கு . . . முன்போ, எப்பவாவது அபூர்வமாக ஒரு பிளஷர்க்காரைப் பார்க்கலாம். எறும்பு சாரையைப் போல் விட்டு விட்டு கூண்டு வண்டிகள் செங்கோட்டை, இலஞ்சி, தென்காசி முதலிய ஊர்களிலிருந்து மாம்பழங்கள், சம்பை (கருவாடு) முதலிய பாரங்களை ஏற்றிக் கொண்டு கோவில்பட்டிக்கு மெதுவாகப் பாடிக் கொண்டே நகர்ந்து செல்லும்'* என்று பேசப்பட்ட செய்தி அமைந்துள்ளதனை அறியலாம். அதன்பின்பு, இப்போ கூண்டு வண்டியே கிடையாது. அவ்வளவும் லாரிகள்.

புழுதி பறக்கும் கப்பிக்கல் ரோடு, இப்பொழுது தார் ரோடு ஆகி நாலு லாரிகள் விலகும்படியான அகலமாகிவிட்டது. இதில் போகும் வாகனங்களையே பார்த்துக் கொண்டிருக்கலாம். கார்கள், பஸ்கள், ஜீப்கள், வேன்கள், டாக்ஸிகள், மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் எத்தனை எத்தனை என்பதன் மூலம் ராணி மங்கம்மாள் காலத்தில் கூண்டு வண்டி செல்வதற்கு ஏதுவாக உருவாக்கப்பட்ட கப்பிக்கல் சாலை பிற்காலத்தில் இயந்திர வாகனங்கள் செல்வதற்கு ஏற்றவாறு அகலப்படுத்தி தார் சாலையாக மாற்றப்பட்டதனை அறிய முடிகிறது. அத்துடன் மங்கம்மாள் சாலை என்றழைக்கப்பட்ட காசி – கன்னியாகுமரி பெருவழிச்சாலை மதுரை சாலை, எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதனை எடுத்துக்காட்டும் சான்றாகவும் கருத முடிகிறது.

மேலும் போக்குவரத்தில் ஏற்பட்ட வளர்ச்சியினை நினைவு கூர்ந்தபடி தூங்கா நாயக்கரை மலர்ந்த முகத்துடன் பார்த்துக் கொண்டே வருகிறார்கள். அந்நேரம் கதையின் ஆரம்பத்தில், தூங்கா நாயக்கரின் நிலையை

உணர்ந்து, தூங்கா நாயக்கருக்குப் பல யோசனை ஓடியது. கேவலம், ஒரு 'குண்டி வேட்டிக்கு' இப்படியொரு 'தரித்திரியம்' வந்திருக்க வேண்டாம். ரொம்ம்ப வருத்தமாகிவிட்டது. மனசுக்குள் அவருக்கு. எனக் குறிப்பிட்டதனைப் போல் தூங்கா நாயக்கர் பல யோசனைகளில் இருந்த போது, சுதந்திர தின வெள்ளி விழாவைக் கொண்டாட தயாராகும் கிராமத்தின் முக்கியஸ்தர்கள் பெரியவர்களின் கூட்டம் வருவதனைப் பார்த்ததும், *"தூங்கா நாயக்கருக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை, பரபரப்போடு எழுந்து நின்று இடது கையால் வேட்டியின் பிய்ந்த கிழிசலை மறைத்துக் கொண்டு அவர்களை வரவேற்கத் தயாரானார்,"* எனக் குறிப்பிட்டுப் போக்குவரத்தில் ஏற்பட்ட வளர்ச்சியைப் போல் தூங்கா நாயக்கர் வாழ்வில் வளர்ச்சி ஏற்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டும் வகையில் இக்கதை முடிவடைகிறது.

**முடிவுரை**

தூங்கா நாயக்கர் உடுத்திய வேட்டி கிழிந்ததும், தன் நிலையினை எண்ணி வருந்தியதுடன், பிறர் உடுத்துகின்ற வேட்டிகளை நினைத்துப் பல யோசனைகளில் இருந்தார். அதே நேரத்தில் கிராம மக்கள் அவருடைய வாழ்வியலை சிந்தித்ததோடு மட்டுமல்லாமல் தூங்கா நாயக்கரை சுதந்திர தின வெள்ளிவிழாவின்போது அவரைக் கௌரவப்படுத்த முனைந்ததனை பதிவு செய்ததன்மூலம் தனிமனிதனின் சூழலையும் சிந்திக்கின்ற சமுதாயத்தினை எடுத்துக்காட்டியதாக 'வேட்டி' சிறுகதை அமைந்துள்ளது எனலாம்.

## References


Carmā, Ār. Es. (2005). *Paṇṭaikkāla intiyā* (raṅkacāmi rā., Trans.). Ceṉṉai: Niyū Ceñcuri Puk Havus. [சர்மா, ஆர். எஸ். (2005). பண்டைக்கால இந்தியா *(ரங்கசாமி ரா.*, Trans.). சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.]

*Tamiḻaka Varalāṟum Paṇpāṭum*. Maturai: Maturai Kāmarācar Palkalaikkaḻakam. [தமிழக வரலாறும் பண்பாடும். *மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.*]

*Tolainilaik Kalvi Iyakkakam*. Maturai: Maturai Kāmarācar Palkalaikkaḻakam. [தொலைநிலைக் கல்வி இயக்ககம். *மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.*]

Rāmaliṅkam, ṭi. Es. (1989). *Intiya Varalāṟu*. Maturai: Ṭi.Es.Ār. Papḷikēṣaṉs. [*ராமலிங்கம், டி. எஸ். (1989).* இந்திய வரலாறு. மதுரை: டி.எஸ்.ஆர். பப்ளிகேஷன்ஸ்.]

Veṅkaṉūr Pālakiruṣṇaṉ. Ōlaiccuvaṭi (Rañcaṉ Cuvāmitās, Trans.). Tiruvaṉantapuram: Ṭōṉ Papḷiṣiṅ Kurūp. [வெங்கனூர் பாலகிருஷ்ணன். ஓலைச்சுவடி *(ரஞ்சன் சுவாமிதாஸ்*, Trans.). திருவனந்தபுரம்*: டோன்* பப்ளிஷிங் குரூப்.]